بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 10.10.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:–

அல்லாஹ் ஒரு மூஃமினுக்கு இறையடியாராகவும் சிறந்த நல்லொழுக்கத்தை மேற்கொள்ளுமாறு கவனமூட்டியுள்ளான். ஏனென்றால் இதுவன்றி நம்பிக்கையாளர் என்று வாதம் செய்யக்கூடியவர் ஒரு போதும் மூஃமின் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவராவார். எவ்வாறு இறைவணக்கம் செய்யக்கூடியவரை மூஃமினுக்கு அடையாளமாக கருதுகின்றோமோ அவ்வாறே அவர் தேவையற்ற விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வது அவசியமாகும். ஒரு மனிதர் நம்பிக்கையாளர் என்று அழைக்கப்பட்டு அவரிடம் தீயசெயல்கள் இருப்பது என்பது சாத்தியமன்று. குறிப்பாக ஒரு மனிதரிடம் ஆணவம் இருக்கும் போது தான் அவனிடமிருந்து தீய செயல்கள் வெளிப்படுகின்றன. இதனால் இறையடியாரான அடியானைப் பற்றி அல்லாஹ் யம்ஷுன அலல் அர்ழி ஹவ்னன் அதாவது அவர்கள் பூமியில் மிகவும் பணிவுள்ளவர்களாக விளங்குவார்கள் என்று கூறுகிறான். எந்த மனிதரிடம் பணிவு இருக்குமோ அவர் சண்டை மற்றும் குழப்பங்களிலிருந்தும் மட்டும் விலகியிருப்பதில்லை. மாறாக, அவருடைய கவனம் சமாதானத்தை நிலைநாட்டுவதன் பக்கம் மட்டுமில்லாமல் மேலும் பல நல்லொழுக்கங்களும் அவரிடம் காணப்படுகின்றது. மேலும் இந்த சிறந்த நல்லொழுக்கங்களுடன் இறைவனுடைய திருப்தியை பெறுவதற்காக இறைவணக்கத்தை செலுத்துவதற்கு முயற்சி செய்தால் அப்படிப்பட்டவரின் நிலை ஒரு உண்மையான மூஃமினுக்குரியதாகும். மேலும் அவர் தான் உண்மையான அடியாராகவும், பணிவுள்ளவராகவும் விளங்குகின்றார். சில பணிகளை மனிதனால் செய்ய முடியாது. எனவே செய்யவில்லை என்று கூறுவது குறைந்தது இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையில் இது தவறாகும். தொழுகை தொடர்பாக இறைவன் ஒரு நம்பிக்கையாளரிடம் இது உங்கள் மீது கடமையாகும். அதை நிறைவேற்றுங்கள் என்று கூறியவாறு மேலும் பல சலுகைகளையும் ஏற்படுத்தியுள்ளான். உதாரணமாக, ஏதாவது காரணமாக தொழுகையை நின்றவாறு தொழ முடியவில்லை என்றால் உட்கார்ந்து கொண்டு தொழுங்கள். அவ்வாறு உட்கார்ந்து கொண்டு தொழ இயலவில்லை என்றால் படுத்துக் கொண்டு தொழுங்கள் என்று கூறுகின்றான். நோய்வாய்ப்பட்டவர், பலவீனமானவர், பயணத்தில் அல்லது ஏதாவது தவிர்க்க முடியாத காரணம் இருந்தால் தொழுகையை சுருக்கியவாறு சேர்த்துத் தொழுங்கள் என்றும் கூறுகின்றான். ஆக, எந்தவொரு நபரும் ஏதாவது காரணத்தை எடுத்துக் கூறி என்னால் தொழ முடியாது என்று கூறவே முடியாது. மேலும் தூய ஆடை இல்லையென்றாலும் எந்த ஆடையை அணிந்துள்ளீர்களோ அந்த ஆடையிலேயே கண்டிப்பாக தொழ வேண்டும். இதே போன்று தண்ணீர் இல்லையென்றால் உளூ செய்வதற்கு பதிலாக தயம்மம் செய்து கொள்ளுகள். ஆக, ஒருவர் என்னால் தொழ இயலாது என்று கூறுவதை அறிவுள்ள எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எப்போதுவரை நினைவாற்றல் இருக்குமோ அப்போது வரை தொழுகையை நிறைவேற்றுவது கடமையாகும்.

அயர்லாந்தில் நான் பள்ளி திறப்பு நாளன்று குத்பா கொடுத்தேன். இறைவணக்கத்தின் பக்கம் கவனமூட்டினேன். அமெரிக்காவிலிருந்து நம்முடைய ஒரு முரப்பி சாஹிப் அவர்கள் கடிதம் எழுதினார்கள். மேலும் சில இடங்களிலிருந்தும் குத்பாவிற்குப்பிறகு பள்ளிவாசலில் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது என்ற கடிதம் வந்து கொண்டிருக்கின்றது. குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் இளைஞர்களிடம் தொழுகையையை முறையாக பேணுவதற்கான பழக்கவழக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இந்த வயதில் நல்ல உடல்நலம் இருப்பதால் இறைவணக்கத்தின் உரிமையை செலுத்த முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இளமையும் நல்ல ஆரோக்கியத்துடன் செய்யக்கூடிய <u>இறைவணக்கங்களும் தான் இறைவணக்கத்தின் உரிமையை செலுத்தியவாறு செலுத்த முடியும் என்று</u>

கூறியுள்ளார்கள். முதுமையில் பல்வேறு நோய்களின் காரணமாக மனிதனால் இறைவணக்கத்தின் உரிமையை செலுத்த முடியாது. ஆகவே, இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். இதுவன்றி நம்முடைய ஈமான் முழுமை பெறாது. இப்போது நான் இரண்டாவது விஷயத்தின் பக்கம் வருகின்றேன். அதாவது நல்லொழுக்கம். சிறந்த நல்லொழுக்கத்தை கொண்டவர்களது ஒரு பண்பு உண்மையை வெளிப்படுத்துவதாகும். மேலும் உண்மையில் நிலைத்திருப்பதாகும். ஒரு நம்பிக்கையாளரின் சிறப்பம்சமே அவர் எப்போது உண்மையில் நிலைத்திப்பதும், பொய்யின் அருகில் கூட செல்லாமல் இருப்பதுமேயாகும். அது எவ்வாறு சாத்தியமாகும் என்றால் அவர் பொய் பேசுவதை கடுமையாக வெறுக்க வேண்டும். ஆனால் எவர் ஒருவர் பொய் பேசிய பிறகும் தான் பொய் பேசியுள்ளோம் என்ற உணர்வு ஏற்படவில்லை என்றால், மேலும் அவருடைய பொய்யின் காரணமாக எவருக்காவது இழப்பு ஏற்பட்டால் அந்த இழப்பை சரிசெய்ய அவர் முயற்சி செய்யவில்லை என்றால் அப்படிப்பட்ட மனிதர் ஈமானிலும் நிலைத்திருக்கவில்லை. மேலும் அவர் நல்லொழுக்கம் உடையவர் என்றும் அழைக்கப்பட தகுதியற்றவராவார். நிச்சயமாக அப்படிப்பட்ட நபர் நேரான பாதையில் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பிறகு நல்லொழுக்கத்தைப் பற்றி அல்லாஹ் **வ கூலூ லின்னாஸி ஹுஸ்னா** அதாவது மக்களிடம் மென்மையாகவும் நல்ல முறையிலும் நடந்து கொள்ளுங்கள். மேலும் சிறந்த முறையில் பேசுங்கள் என்று கூறுகின்றான். சிலருடைய இயல்பில் தான் என்ற அகங்காரம் இருக்கின்றது. இவர்கள் தன்னுடைய அகங்காரம் என்ற பண்பின் மென்மையை உருவாக்க வேண்டும். ஒருபோதும் நீங்கள் பேசக்கூடிய பேச்சினால் மற்றவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடாது. சின்னச் சின்ன விஷயங்களுக்காக கோபமடைந்து விடாதீர்கள். ஆனால் சில மனிதர்கள் தன்னுடைய குணத்தின் காரணமாக திடீரென்று கோபமுற்றுவிடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் இவ்வாறு கடுமையான விஷயங்களைப் பேசிய பிறகு தான் செய்த கடுமைத்தனத்திற்காக வருந்த வேண்டும். உணர்ச்சிவசப்பட்டோ அல்லது வேறு விதமாகவோ எவருக்காவது நம்மூலம் தீங்கு ஏற்பட்டுவிட்டதென்றால் அதை சரி செய்ய முயற்சி செய்யுங்கள். தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் அல்லாஹ் நான் பாவமன்னிப்பின் வாசலை திறந்தே வைத்துள்ளேன் என்று கூறுகின்றான். மேலும் அவர்களுடைய பாவமன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆனால் எவர் தான் செய்த தவறுக்காக வருந்தவில்லையோ அவர் அல்லாஹ்வின் முன்னிலையில் எந்த சாக்குப் போக்கையும் கூற முடியாது. ஆகவே நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். கணவன் மற்றும் மனைவிக்கிடையேயுள்ள பல பிரச்சனைகள் என் முன்னால் வருகின்றன. பெண்களுக்கு தொல்லைகளை கொடுக்கின்றனர். கையையும் உயர்த்துகின்றனர். இதே போன்று மற்ற பிரச்சனைகளும் இருக்கின்றன. அதிலும் தவறான முறையே கையாளப்படுகின்றது. மேலும் அதை புரிந்து கொள்வதற்கு முயற்சியும் செய்வதில்லை. சீர்திருத்தக்குழு அல்லது கஸா அமைப்பு முயற்சி செய்தாலும் இந்த மக்கள் தான் கூறியதிலேயே நிலைத்து நிற்கின்றனர். மேலும் எவருக்காவது தண்டனை வழங்கப்பட்டால் மன்னிப்பிற்காக எழுதுகின்றார்கள். மேலும் அவர்கள் செய்த தவறை சீர்திருத்த முயற்சி செய்கின்றனர். இப்படிப்பட்ட மக்கள் தண்டனை பெற்ற பிறகு மன்னிப்பை பெற்று தன்னுடைய தீய முடிவிலிருந்து தப்பித்து விடுகின்றனர். ஆனால் தண்டனை பெற்றவர் என்ற பெயர் அவருடன் இருக்கின்றது. தான் என்ற அகங்காரத்தை அவர்கள் விட்டிருந்தால் முதலிலேயே பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். இப்படிப்பட்ட மக்கள் தன்னுடைய ஈமானை பாதுகாக்க கவலைப்பட வேண்டும். உலகம் மற்றும் உலகத்தின் பலன்கள் மற்றும் உலக வசதிகள் சில நாட்களுக்கு மட்டும் உரியதாகும். நம்முடைய முடிவைப் பற்றி நாாம் கவலைப்பட வேண்டும். ஜமாஅத்திற்கு நான் பலமுறை நம்முடைய நல்லொழுக்க நிலையை உயர்த்த வேண்டும் என்று கவனமூட்டியுள்ளேன். சின்னச்சின்ன விஷயங்களுக்காக நாம் ஆணவம் என்ற வலையில் சிக்கிக் கொள்ளக்கூடாது. ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவரும் தமது நல்லொழுக்கத்தை உயர்த்தக்கூடியவராகவுமம், மனிதத்தன்மையை நிலைநாட்டக்கூடியவராகவும் விளங்க வேண்டும். நாம் நமது உணர்வுகளை நம்முடைய கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். அல்லாஹ்வின் விருப்பத்திற்கேறப் அதை வெளிப்படுத்த வேண்டும். நான் கணவன் மற்றும் மனைவி தொடர்பான பிரச்சனையை உதாரணமாக கூறினேன்.

பாருங்கள். திருமணத்தின் போது ஓதப்படுகின்ற வசனங்களில் எவ்வாறு அல்லாஹ் இறையச்சத்தை முன்னிறுத்தியவாறு பல்வேறு கட்டளைகளை வழங்கியுள்ளான். இதன்படி கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் அமல் செய்ய வேண்டியது கட்டாயமாகும். ஆனால் பலர் இந்த விஷயங்களைக் கருத்தில் கொள்வதே இல்லை. நிக்காஹ் மற்றும் திருமணம் முடிந்து விட்டது. இனி அவ்வளவு தான் என்று கருதுகின்றனர். நீங்கள் கோபத்தை அடக்கிக் கொள்ளுங்கள். சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள். தான் செய்த தவறில் நிலைத்து நிற்காதீர்கள். இறையடியார்களுக்குரிய உரிமையை செலுத்த முயற்சி செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எவர் இறையடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதில்லையோ அவர் இறைவன் கூறிய முறைப்படி தனது நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்த முடியாது. இறைவன் கூறிய முறைப்படி நல்லொழுக்கத்தை நிலைநாட்டுவது ஒரு நம்பிக்கையாளருக்கு அவசியமாகும். மேலும் இவ்வாறான மக்கள் இறைவனுடைய உரிமையையும் செலுத்தவதில்லை. அவர்களுடைய தொழுகையும் இறைவணக்கங்களும் வெறும் வெளிக்காட்டுதலுக்கேயாகும். ஏனென்றால் இந்த இறைவணக்கங்கள் ஒரு நம்பிக்கையாளரிடம் காணப்படக்கூடிய எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இறைவனுக்கு அருகில் கொண்டு சொல்லக்கூடிய அந்த பணிவு அவர்களிடத்தில் உருவாகவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இது தொடர்பாக வழங்கிய போதனையை அதாவது கோபத்தில் வழிதவறியவர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி நான் எடுத்துக் கூறுகின்றேன். அவர்களுடைய மூளை, அறிவு மற்றும் ஞானத்திலிருந்து காலியாகவே இருக்கின்றது. சில நேரங்களில் பைத்தியக்கார நிலை வரை நிலைமை சென்று விடுகின்றது. உணர்ச்சிவசப்படுதல் மற்றும் கோபம் அதிகமானால் அவருடைய அறிவு பிடுங்கப்படுகின்றது. இதனால் தான் பொறுமையின் பக்கம் கவனமூட்டினார்கள். ஏனென்றால் பொறுமையினால் அறிவு மற்றும் சிந்திக்கும் திறனில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. அன்னார் கூறுகின்றார்கள். எப்போது உணர்ச்சிவசப்படுதலும், கோபமும் வருமோ அப்போது அறிவு சரியாக நிலைபெற்றிருப்பதில்லை. ஆனால் எவர் பொறுமைமை மேற்கொள்வாரோ மேலும் தைரியத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்துவாரோ அவருக்கு ஒரு ஒளி கொடுக்கப்படுகின்றது. இதன் மூலமாக அவருடைய அறிவிலும் சிந்திக்கும் திறனிலும் ஒரு புதிய ஒளி பிறக்கின்றது. மேலும் இவ்வாறு ஒளியிலிருந்து ஒளி பிறக்கின்றது. கோபம் மற்றும் உணர்ச்சிவசப்படும் நிலையில் உள்ளமும், மூளையும் இருளாகி விடுகின்றது. இதன் விளைவாக இருளிலிருந்து இருள் பிறக்கின்றது.

பிறகு சின்னச்சின்ன விஷயங்களுக்காக கோபமடைபவர்களைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள். அவர்களுடைய உள்ளம் ஞானத்திலிருந்து காலியாகி விடுகின்றது. கோபமும் ஞானமும் ஒருபோதும் ஒன்று சேர முடியாது. எவர் போகத்தில் வழிதவறுகின்றாரோ அவருடைய அறிவு செயலிலழந்துவிடுகின்றது. அவருக்கு ஒருபோதும் எந்தவொரு மைதானத்திலும் வெற்றியும் உதவியும் கிடைப்பதில்லை. கோபம் பாதி பைத்தியம் ஆகும். எப்போது இது அதிகமாகின்றதோ அப்போது அவர் முழு பைத்தியமாகி விடுகின்றார். ஒரு மூஃமின் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி கூறியவாறு அன்னார் கூறினார்கள். ஆண்கள் தன்னுடைய ஆற்றலை தேவைக்கேற்ப ஆகுமான வழிகளில் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, கோபம் என்ற ஆற்றல் அதிகமானால் அவர் பைத்தியக்காரராகி விடுகின்றார். எந்த மனிதர் அதிகமாக போபமடைபவராக இருப்பாரோ அவரிடமிருந்து ஞானத்தின் நீரூற்று பிடுங்கப்படுகின்றது. மாறாக, எந்தவொரு எதிரியிடமும் கூட கோபத்துடன் பேசக்கூடாது என்று கூறினார்கள். மேலும் ஒரு மூஃமினின் அடையாளமாக அன்னார் கூறும் போது அவர் கோபத்தை கட்டுப்படுத்தக் கூடியவராக விளங்க வேண்டும். அப்படிப்பட்டவரே உண்மையான நம்பிக்கையாளர் என்று அழைக்கப்படுவார் என்று கூறினார்கள். வல் காலிமீனல் கைல வல் ஆஃபீன அனின் னாஸ் அதாவது ஒரு மூஃமின் என்பவர் கோபத்தை கட்டுப்படுத்தக்கூடியவராவார். மேலும் அவர் மக்களிடம் மென்மையாகவும் மன்னிப்புடனும் நடந்து கொள்கின்றவராவார் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே நாமும் மென்மையுடனும் மன்னிப்புடனும் நடந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆக இந்த படித்தரத்தை தான் நாம் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் ஒளியிலிருந்து பயனடைய விரும்பினால் பொறுமையின் பண்பை தன்னிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நாம் நம்முடைய நாவிலிருந்து ஞானம் நிறைந்த கூற்றுக்களே வர வேண்டும் என்று விரும்பினால், மக்கள் நம் பக்கம் திரும்ப வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிஷனை விரிவுபடுத்த விரும்பினால் நாம் நம்முடைய அன்றாட மற்றும் வீட்டு விவகாரங்களில் கடுமை மற்றும் கோபத்துடன் நடந்து கொள்வதற்கு பகரமாக நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய ஆற்றலை ஒருபோதும் வீணாக்க விரும்பவில்லை என்றால் புறம் பேசுவதிலிருந்தும் போகத்திலிருந்தும் நம்மை பாதுகாக்க வேண்டியது வரும். நாம் உண்மையான மூஃமினாக விரும்பினால் நம்முடைய ஆற்றலை சூழ்நிலைக்கேற்ப தேவையான அளவிற்கு பயன்படுத்த வேண்டும். அன்னார் கூறினார்கள். சிறந்த நல்லொழுக்கத்தின் பக்கம் கவனமூட்டியவாறு தேவையில்லாத கோபத்தை அடக்கிக் கொள்வதும் மன்னிப்பின் பக்கம் கவனமூட்டுவதும் தான் இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். ஆக இந்த நல்லொழுக்கத்தை உருவாக்குவது மிக மிக அவசியமாகும். ஏனென்றால் இதுவன்றி உண்மையான மூஃமினாக ஆகவே இயலாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை உங்களுடைய உணர்வுகளை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள். ஆனால் நம்மிடம் இருக்கக்கூடிய பலகீனம் என்னவென்றால் எவ்வாறு அமல் செய்ய வேண்டுமோ அவ்வாறு நாம் அமல் செய்வதில்லை. இதில் பொதுவான அஹ்மதிகளும் அடங்குவர். பொறுப்பாளர்களும் அடங்குவர். இவ்வாறான மக்கள் மற்றவர்களுக்கு உணர்வுகளை கட்டுபாட்டுக்குள் வைப்பதற்கான போதனையை வழங்குகின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய உண்மையாளராக இருந்து கொண்டும் பொய்யரைப் போன்று இருங்கள் என்று கூறிய விஷயத்தை மறந்து விடுகின்றார்கள். நம்மில் எத்தனை நபரிடம் இந்த சிந்தனை இருக்கின்றது என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அநீதி தற்காலிக உணர்வின் அடிப்படையில் நடந்து விட்டால் பிறகு இந்த கோபம் தனிந்த பிறகு இதனை சரி செய்ய ஒரு நம்பிக்கையாளர் முயற்சி செய்ய வேண்டும். தன்னை சரிசெய்யவில்லை யென்றால், தான் செய்த தவறுக்காக வருந்தவில்லை என்றால் அன்னார் கூறியது போன்று அது உண்மையான ஈமான் கிடையாது. அவருடைய ஈமான் காட்டுவதற்காகவேயாகும். தண்ணீர் வெளியிலும் உட்புறத்தில் காற்று நிறைந்திருக்கக்கூடிய பொருளைப் போன்றவராவார். நான் கூறியது போன்று நாம் நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நம்மீது எத்தனை முறை அநீதி இழைக்கப்பட்டு நாம் அதை பொறுத்துக் கொண்டு போகமற்று பதில் கொடுக்காமல் இருந்திருக்கின்றோம் என்பதை நாம் பார்க்க வேண்டும். மேலும் பொறுப்பாளர்கள் எத்தனை முறை என் மீது வரம்பு மீறப்பட்டது. மேலும் நாம் இந்த வரம்பு மீறுதலை பொறுத்துக் கொண்டு நீதி நேர்மையை நிலைநிறுத்தியவாறு தீர்ப்பை வழங்கியுள்ளோமா ? இவ்வாறு எத்தனை சந்தர்ப்பங்களை நாம் கடந்துள்ளோம். மேலும் இவ்வாறான வரம்பு மீறுதலை நான் எத்தனை முறை பொறுட்படுத்தவேயில்லை என்பதை பார்க்க வேண்டும்.

எவர் ஒருவர் தன்னுடைய விஷயத்தில் வரம்பு மீறி அநீதி இழைத்தால் எவ்வாறு குழந்தைகளுக்கு தாயும் தந்தையும் அல்லது ஆசிரியர் தண்டனை வழங்குகின்றாரோ அதே போன்று ஆட்சியர் அல்லது காஸி அதற்கான தண்டனையை வழங்குகின்றார். இந்த தண்டனை ஏதாவது குற்றத்தின் காரணமாக அவருக்கு கிடைக்கின்றது. ஏனென்றால் அவர் ஷரீஅத்தின் கட்டளைக்கு மாறுபட்டு நடந்தார். அல்லது மற்றவரின் உரிமையை பறித்தார். இதை நான் விளக்கிக் கூற காரணம் சிலர் வரம்பும் மீறுகின்றனர். ஷரீஅத்தின் சட்டத்திற்கு கட்டுப்பட்டும் நடப்பதில்லை. மற்றவர்களது உரிமையையும் அபகரிக்கின்றனர். அப்போது அவர் மீது ஜமாஅத் அமைப்பு தண்டனை கொடுக்கின்றது. என்னுடைய இந்த விஷயத்தைக் கேட்ட பிறகு இது பற்றி எனக்கு எழுதவும் ஆரம்பிக்கின்றனர். மேலும் இப்போதும் எழுத ஆரம்பித்து விடுவர். நீங்கள் மன்னித்தல் மற்றும் கண்டு காணாதது தொடர்பாக குத்பா கொடுத்தீர்கள். எங்களுடனும் இந்த நடைமுறையை காட்டுங்கள் என்று எழுதுகின்றனர். இது தொடர்பாக நான் இதற்கு முன்பும் பலமுறை கூறியுள்ளேன். எனக்கு எவர் மீதும் தனிப்பட்ட எதிர்ப்பு கிடையாது. சிலர் எனக்கு ஏச்சுக்களால் நிறைந்தத கடிதங்களைக் கூட எழுதிவிடுகின்றனர். அவர்களுக்காக கூட என்னுடைய உள்ளத்தில்

ஒருபோதும் கோபம் எழுந்ததில்லை ஒருபோதும் கோபத்தின் உணர்வுகள் வெளிப்பட்டதில்லை. அப்படிப்பட்ட மக்கள் தன்னுடைய பெயரை எழுதுவதில்லை. ஏதாவதொரு பெயரை எழுதுகின்றனர். அவர்கள் தன்னுடைய பெயரை எழுதினால் கூட நான் அவர்களுக்கு நம்பிக்கை தெரிவிக்கின்றேன். அதாவது இதுபற்றி அவர்கள் மீது எந்தவொரு கேள்வி கணக்கும் கேட்கப்பட மாட்டாது. அவர்கள் ஏசட்டும். ஆனால் நிச்சயமாக அவர்களுக்காக கருணை வெளிப்படுகின்றது. அவர்களுக்காக மென்மேலும் பாவமன்னிப்பு கேட்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கின்றது. எனக்கு அது பயனுள்ளதாகவும் இருக்கின்றது. தண்டனை மற்றவர்களுக்குரிய உரிமையை பறித்ததனால் அல்லது ஷரீஅத்தின் கட்டளைக்கு மாற்றமாக நடந்ததினால் கிடைக்கின்றது. மேலும் இந்த தண்டனை மிகுந்த கவலையோடு கொடுக்கப்படுகின்றது. சந்தோஷத்துடன் எவ்வித தண்டனையும் வழங்கப்படுவதில்லை. எந்த நாளில் என்னுடைய அலுவலகத்தில் நஸாரத் உமூரே ஆமா மற்றும் அமீர்மார்களின் தரப்பிலிருந்து எவருடைய தண்டனையையாவது மன்னிக்கக்கோரி சிபாரிசு செய்து அவர் செய்த தவறை சரிசெய்து கொண்டார் என்ற கடிதங்கள் வருமோ அன்றைய தினமே எனக்கு அதிக மகிழ்ச்சிக்குரிய நாளாக இருக்கும். ஆக, எங்கு என்னுடைய கடமைகள் என்னுடைய கைகளை கட்டியுள்ளதோ அங்கு என்னை கட்டாயப்படுத்தாதீர்கள். நிச்சயமாக நான் இதையும் கண்டிப்பாக கூறுவேன். அதாவது இரு தரப்பினரும் தன்னுடைய பிரச்சனையை கஸா அமைப்பிற்கு கொண்டு வருகின்றார்கள். கஸா அமைப்பு முழு சம்பவத்தின் அடிப்படையில் தீர்ப்பை வழங்குகின்றது. ஒரு தரப்பினர் மீது உரிமையை நிறைவேற்றுங்கள் என்ற பொறுப்பு சுமத்தப்படுகின்றது. அல்லது பணம் தொடர்பான விஷயம் என்றால் பணத்தை செலுத்துங்கள் என்று கூறப்படுகின்றது. மேலும் எந்த நபர் பணத்தை பெறத் தகுதியானவரோ, எவர் அதற்குரிய உரிமையை பெறத் தகுதியானவரோ அவர் எதிர் தரப்பினர் பணத்தை செலுத்த முடியாதவராக இருந்தால் எவ்வளவு அதிகமாக சலுகைகளை வழங்க முடியுமோ அவ்வாறு வழங்கலாம். அவர் கொடுத்தே ஆக வேண்டும் என்று கூறக்கூடாது. இது தான் அல்லாஹ் மற்றும் ரஸுலின் கட்டளையாகும். தேவையில்லாமல் ஆணவத்தை மேற்கொண்டு அநீதி இழைக்கக்கூடாது. எவ்வாறிருப்பினும் நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். நாம் எந்த நபரை பின்பற்றுகின்றோமோ அந்த நபரின் பெயர் மஸீஹ் என்று வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அன்னாரின் பெயரை மஸீஹ் என்று ஏன் வைக்கப்பட்டுள்ளது என்று நாம் சிந்திக்க வேண்டும். எந்த விஷயம் மஸீஹை மற்ற நபிமார்களைக் காட்டிலும் சிறந்ததாக்கிக் காட்டுகின்றது. ஒவ்வொரு நபியிடமும் ஏதாவதொரு விஷயம் மற்ற நபியை விட்டும் சிறப்பாக காட்டுகின்றது. இது பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறிய விளக்கம் மிகவும் உள்ளத்தை ஈர்க்கக்கூடியதாகும். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சிறப்பம்சம் என்னவென்றால் அவர் மஸீஹ் போதித்த மென்மையான போதனையை கொண்டவராக விளங்குவார். எவ்வித சந்தேகமுமின்ற எல்லா நபிமார்களும் மென்மையான போதனையைத் தான் வழங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் தன்னுடைய காலத்தின் நிலைக்கேற்ப இதன் பக்கம் அதிக கவனம் செலுத்தினார்கள். இந்த சிறப்பான போதனையை தான மஸீஹ் கொண்டு வந்தார்கள். எப்போது அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பெயரை மஸீஹ் என்று வைத்தானோ அல்லது அன்னாரை மஸீஹோடு ஒப்பிட்டு எடுத்துக் கூறினானோ அதனுடைய பொருள் என்னவென்றால் அன்னாருக்கும் குறிப்பாக மென்மையான போதனையை வழங்குமாறு கட்டளை கொடுக்கப்பட்டது. அன்னாரின் பெயரை மஸீஹ் என்று வைப்பதற்கான மற்றொரு காரணம் அன்னார் கிருத்தவர்களுக்கு நேர்வழி காட்டவும் வந்தார்கள். இதனாலும் மஸீஹ் என்று அழைக்கப்பட்டார்கள். அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள். இறைவன் உங்களிடம் ஒரு மரணத்தை எதிர்பார்க்கின்றான். அதன் பிறகு அவன் உங்களை உயிர்ப்பிப்பான். நீங்கள் ஒருவருக்கொருவர் விரைவாக சமாதானம் செய்து கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய சகோதரனின் தவறை மன்னியுங்கள். ஏனென்றால் தன்னுடைய சகோதரனிடம் சமாதானத்தை விரும்பாதவரே தீய நபராவார். அவர் வெட்டப்படுவார். ஏனென்றால் அவர் பிளவை ஏற்படுத்துகின்றார். நீங்கள் உங்களுடைய மன எழுச்சியை விட்டுவிடுங்கள். மேலும் கோபத்தை கைவிட்டு விடுங்கள். மேலும் உண்மையாளராக இருந்து கொண்டு பொய்யரைப் போன்று நடந்து கொள்ளுங்கள். இதன் மூலமாக நீங்கள் கருணை

காட்டப்படுவீர்கள். ஆக நாம் நம்மை சீர்திருத்துவது மிகவும் அவசியமாகும். நாம் உலகிற்கு முன்னால் எப்படிப்பட்ட முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டுமென்றால் உலகம் நாம் நம்முடைய மன எழுச்சியின் மீது முழுமையாக ஆதிக்கம் செலுத்துகின்றோம் என்று கருத வேண்டும்.

தீமையை ஒழிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் எங்காவது தீமையை கண்டால் அதை உங்களுடைய கைகளால் தடுக்க இயலும் என்றால் தடுங்கள். அவ்வாறு கையால் தடுக்க இயலவில்லை என்றால் நாவினால் தடுங்கள். அவ்வாறும் செய்ய இயலவில்லை என்றால் உள்ளத்தால் அதை வெறுங்கள் என்று கூறினார்கள். ஆக அஹ்மதி கலாச்சாரத்திலும் தவறான வேலைகள் மற்றும் தீய செயல்களை தீயது என்று கருதி அதை தடுக்க நினைக்க வேண்டும். அல்லது அதை தடுக்க அல்லது புரிய வைக்க அல்லது முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். எப்போது அனைவருக்கும் இந்த உணர்வு ஏற்படுமோ அப்போது ஒருவர் கூட நல்லொழுக்கத்திலிருந்து விலகி விட மாட்டார். மேலும் ஒவ்வொருவரும் தன்னுடைய நிலைமையை மேலோங்கச் செய்ய முயற்சி செய்கின்றார். எந்தவொரு அநீதிக்கும் நாம் துணை நிற்கக்கூடாது. நாம் அல்லாஹ் மற்றும் நபி (ஸல்) அவர்கள் கூறிய வழியை மேற்கொள்ள வேண்டும். இதன் பக்கம் இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். நாம் கருணை, மன்னிப்பு மற்றும் அன்பு, நேசத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எவரையாவது அநீதியிழைக்கக் கண்டால் அவர் அநீதிக்குள்ளானவர் மீது அநீதி இழைக்கின்றார் என்று கருத வேண்டாம். மாறாக, அவர் நம்மீது அநீதி இழைக்கின்றார். இதைவிட அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மீது அநீதி இழைக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் எந்த பணிக்காக அன்னார் அனுப்பப்பட்டார்களோ அதை அவர் அவமானப்படுத்துகின்றார். ஆக இவ்வாறான தாக்குதல் நடத்துபவரின் தாக்குதலை நாம் தடுக்க வேண்டும். கையால் தடுக்க இயலவில்லை என்றால் நாவினால் தடுங்கள். உள்ளத்தால் வெறுங்கள். மேலும் அநீதிக்குள்ளானவருக்காக அநீதியிலிருந்து அவர் தப்பிப்பதற்காக துஆ செய்யுங்கள். அவ்வாறு நாம் தீய செயலை வெறுப்போமேயானால் அது நம்மிடமிருந்து நம்முடைய சுற்றுச்சூழலிலும் இந்த அநீதியை முடிவுக்கு கொண்டு வந்து விடுகின்றது. ஆனால் சில நேரங்களில் குடும்ப விவகாரங்களில் தாய் தந்தை மற்றும் சகோதர சகோதரிகளும் இந்த அநீதியில் இணைந்து விடுகின்றார்கள். இதுமட்டுமல்லாமல் புரிய வைப்பதற்கு பகரமாக சில நண்பர்கள் என்ற பெயரில் சிலரும் இதில் இணைகின்றனர். ஆக நாம் சுற்றுச்சூழலை சீர்திருத்துவதற்காக இந்த அநீதியில் இணைவதற்கு பகரமாக அநீதிக்குள்ளானவருக்கு ஏற்பட்ட அநீதியை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட அநீதியாக கருத வேண்டும். இவ்வாறு நடந்தால் நம்முடைய சுற்றுச்சூழல் எவ்வாறு சரியாகி விடுகின்றது என்பதை நம்மால் பார்க்க இயலும். மேலும் நம்முடைய இந்த அமல் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவர்களாக நம்மை ஆக்கும்.

அல்லாஹ் நம்மை இறைவணக்கத்தை செலுத்துவது மட்டுமல்லாமல் சிறந்த நல்லலொழுக்கத்தை நிலைநாட்டக் கூடியவராகவும், நிலைபெறச் செய்யக் கூடியவராகவும் விளங்குவதோடு சண்டையிலும் சச்சரவிலும் விழுந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பெயரை அவப்பெயராக்காமல் இருப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் நம்மை எல்லாவிதமான மன இச்சையிலிருந்தும் காப்பாற்றுவானாக. இன்றும் தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழுகையை தொழ வைப்பேன். மதிப்பிற்குரிய மர்ஹூம் சவ்தரி முஹம்மது அப்துர் ரஹ்மான் சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய ஆசியா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். 3 அக்டோபர் 2014 லில் தன்னுடைய 69 வது வயதில் இறையடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் மர்ஹூமாவின் தர்ஜாவை உயர்த்துவானாக. அவர்களுடைய குழந்தைகளையும் அவர்கள் விட்டுச் சென்ற நன்மையான வழியில் தொடரச் செய்வானாக.

Nazarat Nashr-o-Isha’at - Qadian